பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

24 10 2025 6.30

வெள்ளிக்கிழமை மாலை

## மாநிலச் செய்திகள்

### தலைப்புச் செய்திகள்

- இளையோர் மேம்பாட்டுக்கு தமது அரசு முக்கியத்துவம் அளித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- இளையோரின் திறன் மேம்பாட்டுக்காக 11 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

- மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பயிர்கள் குறித்த கணக்கெடுக்கும் பணி தொடங்கியுள்ளதாக தமிழக அரசு கூறியுள்ளது.

- வங்கக் கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வுப் பகுதி புயலாக வலுவடைய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

- ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவின் Veer Bhadu வெண்கலப்பதக்கம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ----

இளையோர் மேம்பாட்டுக்கு தமது அரசு முக்கியத்துவம் அளித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

நாடு முழுவதும் பல்வேறு துறைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட 51 ஆயிரம் பேருக்கு 40 இடங்களில் நடைபெற்ற பணி நியமன ஆணைகளை வழங்கும் நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக அவர் உரையாற்றினார்.

இளையோர் மேம்பாட்டுக்காக மத்திய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களையும் அவர் பட்டியலிட்டார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் இளையோர் முக்கிய பங்கு வகிப்பதாகவும் திரு நரேந்திர மோடி கூறினார்.

திருச்சியில் நடைபெற்ற இதற்கான நிகழ்ச்சியில் மத்திய நிதித்துறை இணையமைச்சர் திரு பங்கஜ் சௌதிரி பங்கேற்று பணிநியமன ஆணைகளை வழங்கி பேசினார்.

இளையோருக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கி தருவதற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இளையோரின் திறன் மேம்பாட்டுக்காக 11 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் திரு பங்கஜ் சௌதிரி தெரிவித்தார்.

கோவையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய இணையமைச்சர் திரு ஸ்ரீபத் யசோ நாயக் பங்கேற்று பணிநியமன ஆணைகளை வழங்கிய பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார்.

கடந்த மூன்றாண்டுகளில் 11 லட்சத்திற்கும் மேற்பட்டோருக்கு மத்திய அரசு துறைகளில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதற்காக பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் திரு ஸ்ரீபத் யசோ நாயக் கூறினார்.

சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மண்டல அஞ்சல் துறை தலைவர் திரு நடராஜனும், மதுரையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முதன்மை அஞ்சல் துறை தலைவர் திருமதி மரியம்மா தாமஸூம் பணிநியமன ஆணைகளை வழங்கினர்.

இந்த நிகழ்ச்சிகளில் பணிநியமன ஆணைகளை பெற்றவர்கள் தங்களுக்கு இந்த நாள் மகிழ்ச்சியான நாள் என்று கூறினர்.

>><><><><><<

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பயிர்கள் குறித்த கணக்கெடுக்கும் பணி தொடங்கியுள்ளதாக மாநில வேளாண் துறை அமைச்சர் திரு எம் ஆர் கே பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

இன்று நாகையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 30 முதல் 33 சதவீதம் வரை பாதிப்புக்குள்ளாகி உள்ள பயிர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கப்படும் என்றார்.

>><><><><><<

நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தும் வகையில் மாநிலம் முழுவதும் 6 கோடி பனை விதைகள் நடவு செய்யப்படவுள்ளதாக பொதுப்பணித் துறை அமைச்சர் திரு எ வ வேலு கூறியுள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் 10 லட்சம் பனை விதைகள் நடும் பணியினை இன்று தொடங்கி வைத்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

தமிழக அரசின் திட்டங்கள் மூலம் அனைத்துத் தரப்பினரும் பயனடைந்து வருவதாக திரு எ வ வேலு தெரிவித்தார்.

>><><><><><<

தமிழகத்தில் மக்கள் ஆட்சி மாற்றத்தை விரும்புவதாக பிஜேபி மாநில தலைவர் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

மதுரை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிஜேபி – அஇஅதிமுக கூட்டணிக்கு மக்கள் ஆதரவு அதிகரித்து வருவதாக தெரிவித்தார்.

டெல்டா மாவட்டங்களில் நெல் கொள்முதல் முறையாக நடைபெறவில்லை என்றும் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டினார்.

>><><><><><<

வங்கக் கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வுப் பகுதி புயலாக வலுவடைய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக் கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் – செந்தாமரைக்கண்ணன் 1 - 37 செகண்ட்ஸ்)

கடலூர், புதுக்கோட்டை உள்ளிட்ட 6 மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்றும் திரு செந்தாமரைக் கண்ணன் தெரிவித்தார்.

>><><><><><<

<u>மாவட்டச் செய்திகள்</u>

தஞ்சை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மழை பாதிப்பை தடுப்பதற்கு தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு இருப்பதாக மேயர் திரு ராமநாதன் கூறியுள்ளார்.

--------------------

ரயில் விபத்து ஏற்பட்டால் மேற்கொள்ள வேண்டிய மீட்பு நடவடிக்கைகள் குறித்த ஒத்திகை நிகழ்ச்சி இன்று திருச்சியில் நடைபெற்றது.

-------------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மழைநீர் சேமிப்பு குறித்த விழிப்புணர்வு வாகனத்தின் சேவையை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் இன்று தொடங்கி வைத்தார்.

---------------------

நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம் சட்டப்பேரவை தொகுதி திமுக உறுப்பினர் பொன்னுசாமியின் இறுதி சடங்குகள் அவரது சொந்த ஊரான கொல்லிமலையில் இன்று அரசு மரியாதையுடன் நடைபெற்றது.

----------------------

கன்னியாகுமரி மாவட்டத்தில் பெய்து வரும் மழை காரணமாக கோதை ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. திற்பரப்பு அருவில் குளிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

-------------------

மேட்டூர் அணையிலிருந்து திறந்து விடப்படும் உபரிநீரின் அளவு வினாடிக்கு 65 ஆயிரம் கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

>><><><><><<

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவின் Veer Bhadu வெண்கலப்பதக்கம் வென்றார்.

பக்ரைனில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 80 கிலோ எடை தற்காப்புக் கலைப் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 2 தங்கம், 3 வெள்ளி, 7 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

-----------------

23 வயதிற்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Hansika Lamba அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

செர்பியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 53 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், உஸ்பெகிஸ்தானின் Dilshoda Matnazarova-ஐ வென்றார்.

---

இந்தோனேஷிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Devika Sihag அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் 21-12, 13-21, 21-17 என்ற செட்கணக்கில் அமெரிக்காவின் Ishika Jaswan -ஐ வென்றார்.

-----------------

சீனாவின் Chengdu-வில் நடைபெற்று வரும் ஆசிய இளையோர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Shaina Manimuthu அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 21-14, 21-16 என்ற செட்கணக்கில் ஜப்பானின் Yubuki Azumaya -ஐ வென்றார்.

>> End of News <<